செ.வெ.எண் -25 நாள்: 18.06.2019

# பத்திரிக்கைச் செய்தி

அரியலூர் மாவட்டத்தில் 7 ஆவது பொருளாதார கணக்கெடுப்பு 2019 ஜீலை மாதம் முதல் நடைபெற உள்ளது. பொருளாதார கணக்கெடுப்பு என்பது சொந்த நுகர்வுக்கல்லாத வேளாண் சார்ந்த மற்றும் வேளாண் சாராத பொருட்கள் / பணிகள் ஆகியவற்றின் உற்பத்தி மற்றும் விற்பனை தொடர்பான கணக்கெடுப்பு ஆகும். இக்கணக்கெடுப்பு பணி இந்திய மின் ஆளுமை உள்ளூர் ஒருங்கிணைப்பாளர்கள் (E- Governance - Common Service Centre) மூலம் நடத்தப்படவுள்ளது.

இக்கணக்கெடுப்பு தொடர்பான விவரங்களை சேகரிக்க வரும் களப்பணியாளர்களிடம் பொதுமக்களும்இ நிறுவனங்களும் விவரங்களை முழுமையாக வழங்கி நாட்டு வளர்ச்சிக்கு தேவையான திட்டங்களை வகுக்க உதவுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.மு.விஜயலட்சுமி, இஆப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**